Under Section.173 BNSS)

FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை -

~~(Under Section 154 Cr.P.C.)~~

(குற்ற வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8109489-15/2025/Ac\cB

1. District : மாவட்டம் Coimbatore. PS: காவல்நிலையம் V&AC Coimbatore Year: ஆண்டு 2025 FIR No.: மு.த.அ. எண் Date: நாள் 25/07/2025

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Sections பிரிவுகள்: 7(a)

(ii) Act சட்டம்: Act, 1988 as amended Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: in 2018. Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 21.07.2025 Date to : நாள் வரை 24.07.2025.

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 1300 Hrs Time to : நேரம் வரை 1500 Hrs

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 24.07.2025 Time : நேரம் 2000 Hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 24.07.2025 Time : நேரம் 2000 Hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Computer Tamil typed.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் South West about 11 km

Beat Number : முறைக் காவல் எண்

(b) Address : முகவரி Pettur Taluk office, Coimbatore District.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —

இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் R. Ranjith kumar (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Ramasamy.

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 44 Years (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் Liaison Manager. (g) Address : முகவரி D.No. Y146A, Perumal kovil Street, Anipatty Post, Pollachi Taluk, Coimbatore District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr. Ramesh kumar, Tahsildar, O/o. Pettur Taluk office Coimbatore District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் -

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

-

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet Enclosed.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS .....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

25/7/2025

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

25/7/2025

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

25.07.2025 at 1030hrs.

Name: பெயர் M. Arumugam.
Rank: நிலை Inspector of Police
VCPAC
Coimbatore.

கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.15/2025/AC/CB u/s. 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கை வரிசை எண்.8109489 ன் தொடர்ச்சி–

நேற்று 24.07.2025 ஆம் தேதி வியாழக்கிழமை இரவு 8 மணிக்கு கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு காவல் ஆய்வாளர் திரு.ஆறுமுகம் ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது கோவை மாவட்டம், பொள்ளாச்சி தாலூக்கா, ஏரிப்பட்டி அஞ்சல், பெருமாள் கோவில் வீதியில் உள்ள கதவு எண்.1/146A ல் வசிக்கும் ராமசாமி என்பவரது மகன் R.ரஞ்சித்குமார் என்பவர் கணினியில் தமிழில் தட்டச்சு செய்த ஒரு எழுத்து மூலமான புகாரினை கொடுத்தார். நான் அந்த புகாரினை படித்து பார்த்தேன். புகார்தாரரின் புகாரின் விபரம் பின்வருமாறு – அனுப்புநர் R.ரஞ்சித்குமார், வயது-44, த/பெ.ராமசாமி, கதவு எண்.1/146A, பெருமாள் கோவில் வீதி, ஏரிப்பட்டி அஞ்சல், பொள்ளாச்சி தாலூக்கா, கோவை மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்பு பிரிவு, கோவை. அய்யா, நான் கோவை மாவட்டம், பொள்ளாச்சி தாலூக்கா, ஏரிப்பட்டி அஞ்சல், பெருமாள் கோவில் வீதியில் உள்ள கதவு எண்.1/146A ல் எனது குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் கோவையில் உள்ள தனியார் நிறுவனத்தில் Liaison Manager ஆக பணிபுரிந்து வருகிறேன். எனது முதலாளி திரு.பழனிச்சாமி அவர்கள் செல்வநிலைச்சான்று (Solvency Certificate) வேண்டி கடந்த 19.06.2025 தேதியில் விண்ணப்பித்திருந்தார், அதன் விண்ணப்பப எண்.TN1720250619106 ஆகும். மேற்படி அவர் செய்த விண்ணப்பம் கிராம நிர்வாக அலுவலர், வருவாய் ஆய்வாளர் மற்றும் தலைமையிடத்து துணை வட்டாட்சியர் ஆகியோர்களால் பரிந்துரை செய்யப்பட்டு தற்போது பேரூர் தாசில்தாரின் ஒப்புதலுக்காக இருப்பதாகவும், அது சம்மந்தமான வேலைகளை சம்மந்தப்பட்ட பேரூர் தாலூக்கா அலுவலகம் சென்று கவனித்து செல்வநிலைசான்றிதழை பெற்றுவரும் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்திருந்தார். அதன்படி நானும் சென்ற வாரத்தில் ஒரு நாள் கோவை பேரூர் தாலுக்கா அலுவலகம் சென்று அங்குள்ள தாசில்தார் திரு.ரமேஷ்குமார் அவர்களை சந்தித்து எனது முதலாளி திரு.பழனிச்சாமி அவர்கள் பெயரில் விண்ணப்பம் செய்திருந்த செல்வநிலைச்சான்றிதழ் சம்மந்தமாக கேட்டேன். அதற்கு அவர் இச்சான்றிதழை அரசாங்கம் தற்போது நிறுத்திவிட்டதாகவும், தான் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கேட்டு சொல்வதாக கூறினார். அதனால் நானும் சரியென்று சொல்லி வந்துவிட்டேன். பின்னர் நான் கடந்த 21.07.2025 ஆம் தேதி மதியம் சுமார் 1 மணிக்கு பேரூர் தாலுக்கா அலுவலம் சென்று தாசில்தார் திரு.ரமேஷ்குமார் அவர்களை சந்தித்த போது, திரு.ரமேஷ்குமார் அவர்கள் என்னிடம் அரசாங்கம் தற்போது சால்வன்சி சர்ட்டிபிக்கெட் கொடுப்பதை நிறுத்திவிட்டார்கள். தான் ஆட்சியர் அலுவலகத்தில்

கேட்ட போது ஏற்கனவே சால்வன்சி சர்ட்டிபிக்கெட் வேண்டி விண்ணப்பித்து லாகினில் நிலுவையில் இருப்பவர்களுக்கு மட்டும் தான் கொடுக்க முடியும் என்று சொன்னார்கள். தற்போது எனது லாகினில் நிலுவையில் உள்ள சால்வன்சி சர்ட்டிபிக்கெட்டை கொடுக்க வேண்டுமா அல்லது வேண்டமா என்பதை நான் தான் பார்த்து முடிவு செய்ய வேண்டும். தான் சால்வன்சி சர்ட்டிபிக்கெட் கொடுக்க வேண்டும் என்றால் தனக்கு தனியாக பணம் ரூ.50,000/– தரவேண்டும், இல்லைனா உங்களது விண்ணப்பத்தை என்னால் தள்ளுபடியும் செய்ய முடியும் என்று கூறினார். நான் சரி சார் அலுவலகத்தில் பேசிவிட்டு சொல்வதாக கூறி வந்துவிட்டேன். அதன்படி நானும் எனது அலுவலகத்தில் கேட்ட போது, அவர்கள் அவ்வளவு பணம் கொடுக்க முடியாது பணம் அதிகமாகயுள்ளது, தாசில்தார் அவர்களிடம் பேசி நீங்களே வேலையை முடித்து வாருங்கள் என்று கூறினார்கள். நானும் மற்ற அலுவலக வேலையில் பிசியாக இருந்துவிட்டேன். இந்நிலையில் இன்று 24.07.2025 ஆம் தேதியன்று காலை சுமார் 11.40 மணியளவில் தாசில்தார் திரு.ரமேஷ்குமார் அவர்கள் 9994957589 என்ற தொலைபேசி எண் மூலம் என்னுடைய தொலைபேசி 9944531063 என்ற எண்ணிற்கு தொடர்பு கொண்டு என்னபா பணம் ரெடியாகி விட்டதா என்று கேட்டார். அதற்கு நான், எனது அலுவலகத்தில் பணம் சம்மந்தமாக என்னிடம் கூறிய மேற்படி விவரத்தை அவரிடம் சொல்லி, வேண்டும் என்றால் பணம் ரூ.10000 மட்டும் கொடுக்கட்டுமா என்று கேட்டேன். அதற்கு அவர் செல்வநிலை சான்று பெற 5000, 10,000 ரூபாய் எல்லாம் எனக்கு கொடுப்பது வெரி வொர்ஸ்ட், எனது தகுதிக்கு ஏற்றவாறு, தான் சொன்ன பணத்துடன் இன்று மதியம் நேரில் வந்து பாருங்கள் என்று கூறினார். ஆனால் தாசில்தார் கேட்ட பணம் இன்று ரெடியாகவில்லை, இருந்தாலும் தாசில்தார் வரச்சொன்னதன் பேரில் நானும் அவரிடம் பேசி பார்க்கலாம் என்று இன்று மதியம் நான் கோவை பேரூர் தாலூக்கா அலுவலகம் சென்றேன். அங்கு தாசில்தார் இல்லாததால் அவருக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட போது அவர் குனியமுத்தூரில் உள்ள ஆயிஷா மஹாலில் அமைக்கப்பட்டுள்ள அரசு முகாமில் தான் இருப்பதாகவும், அங்கு நேரில் வரும்படி அவர் கூறியதன்பேரில் நான் அங்கு சென்று மதியம் சுமார் 3 மணிக்கு அவரை சந்தித்தேன். அப்போது நான் அவரிடம் ஆபீசில் நீங்கள் சொன்ன விவரத்தை சொல்லிவிட்டேன் என்று கூறினேன். அதற்கு அவர் ரூ.5,000, 10,000 க்கு எல்லாம் எவன் இந்த வேலையை பண்ணுவான், 1½ கோடிக்கு சால்வன்சி சர்ட்டிபிக்கெட் கேட்கறீங்க, ரூ.50,000 கொடுக்கறதுக்கு யோசிக்கிறீங்க, ரொம்ப ரொம்ப வொர்ஸ்ட், எத்தனை முறை உங்களிடம் சொல்வது, ரூ.50,000/– க்கு குறைவாக பணம் கொடுத்தால் உங்களது விண்ணப்பத்தை நிராகரித்து விடுவேன், இனிமேற்கொண்டு இது போன்ற சான்றிதழுக்கு அப்ளை செய்ய இயலாது, ஏன்னா இந்த குறிப்பிட்ட சான்றிதழ் கொடுப்பதை அரசாங்கம்

நிறுத்திவிட்டது. யாருக்கு எவ்வளவு கொடுக்க வேண்டும் என்ற தராதரம் கூட உங்களது முதலாளிக்கு தெரியாதா என்று கூறி உங்களிடம் மட்டும் தான் ரூ.50,000/– கேட்டுள்ளளேன். இதே மற்றவர்களாக இருந்தால் ரூ.1,00,000/– முதல் ரூ.1,50,000/– வரை கேட்டிருப்பேன். நாளை கண்டிப்பாக பணம் ரூ.50,000/– கொண்டு வந்து கொடுங்கள் என்று கூறி, தான் நாளை காலை மதியம் வரை தனது பேரூர் அலுவலகத்தில் இருப்பதாகவும், அதற்குள் அலுவலகத்தில் வந்து தான் கேட்ட பணம் கொண்டு வந்து கொடுக்கும்படி சொன்னார். இதனால் நானும் சரி என்று சொல்லி வந்துவிட்டேன். அதன்பின்னர் நான் யோசித்து பார்த்ததில் உயர் பதவியில் உள்ள அரசு அதிகாரியான இவர் செல்வநிலைசான்று சம்மந்தமாக செய்ய வேண்டிய வேலையை செய்வதற்காக இவர் கேட்கும் லஞ்சப்பணம் கொடுத்து மேற்படி வேலையை முடிக்க எனக்கு விருப்பமில்லை என்பதால் அவர் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, ஒப்பம் x/x/x/x/, 24/7/2025 (R.RANJITHKUMAR) இடம் – கோவை, தேதி – 24.07.2025. மேற்படி புகார் சம்மந்தமாக ரகசிய விசாரணை மேற்கொண்டதில் இருந்தும், புகார்தாரருக்கும் எதிரிக்கும் இடையே தனிப்பட்ட முறையில் ஏதேனும் முன்விரோதம் உண்டா என்பது குறித்து மேற்கொள்ளப்பட்ட இரகசிய விசாரணையில் அவ்வாறு ஏதுமில்லை என்றும் புகார்தாரரின் புகாரின் உண்மைதன்மை உறுதி செய்யப்பட்டது, மேலும் வாதி இன்று 25.07.2025 ஆம் தேதி காலை 09.30 மணிக்கு கோவை ஊ.த.க.பிரிவு அலுவலகத்தில் நேரில் ஆஜராகி, நேற்று 24.07.2025 ஆம் தேதி மாலை 3 மணிக்கு வாதிக்கும், எதிரி திரு.ரமேஷ்க்குமார் அவர்களுக்கும் கோவை குனியமுத்தூரில் நடந்த உரையாடல்களை அவரது செல்போனில் பதிவு செய்திருந்ததாகவும், அதனை தற்போது DVD ல் பதிவிறக்கம் செய்து கொண்டு வந்திருப்பதாகவும் கூறி அதனை ஆஜர் செய்தார். அந்த DVD உரையாடல்களை கேட்டு பார்க்கப்பட்டு அதனின் பதிவை மற்றொரு DVD ல் விசாரணைக்காக பதிவிறக்கம் செய்தும், வாதியிடமிருந்து 63(4)(c) of B.S.A 2023 சான்று பெறப்பட்டது. எனவே எதிரியின் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய தகுந்த முகாந்திரம் இருப்பது தெரியவந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று இன்று 25.07.2025 ம் தேதி காலை 09.45 மணிக்கு கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.15/2025/AC/CB u/s.7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 ன்படி மேற்படி எதிரி திரு.ரமேஷ்குமார், தாசில்தார், பேரூர் தாலுக்கா, கோவை என்பவர் மீது குற்ற வழக்கு பதிவு செய்தேன். Sir, Received the above complaint on 24.07.2025 at 20.00 hrs. Sd/- x-x-x-x 24/07/2025 (G.Arumugam), Inspector of Police, V&AC, Coimbatore. Sir, after

conducting a discreet enquiry, a case in Coimbatore V&AC Cr.No.15/2025/AC/CB u/s.7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 was registered by me on 25.07.2025 at 09.45 hrs. Sd/- x-x-x-x 25/07/2025 (G.Arumugam), Inspector of Police, V&AC, Coimbatore. முதல் தகவல் அறிக்கையின் அசல், புகார்தாரரின் புகார்மனு, DVD வுடன் புகார்தாரர் திரு.ரஞ்சித்குமார் அவர்களிடமிருந்து பெற்ற 63(4)(c) of BSA, 2023 ன் சான்றிதழ் மற்றும் File Hash Value Report with Certificate U/S 63(4)(c) of BSA, 2023 ன் ஆகியவற்றை கனம் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தும், வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.

25/7/2025

(G.ஆறுமுகம்)
காவல்ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்.